# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,

நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590.


**ஆணை நாள்.20.05.2026**

**முன்னிலை**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 4755/B/2025**

திரு. N. சுந்தர் ... மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொது தகவல் அலுவலர்,
ஆராய்ச்சி அலுவலர்,
தமிழ்நாடு ஆவணகாப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி,
எழும்பூர்,
சென்னை-8.
... பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வழக்கின்மீது இவ்வாணையத்தால் (07.01.2026) அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவினைத் தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொது தகவல் அலுவலர், திருமதி.ஜெ.ஹஸ்ரத்பேகம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), சென்னை அவர்கள் (20.05.2026) இன்று ஆணையத்திற்கு நேரில் ஆஜராகி மனுதாரர் கோரிய ஆவணங்கள் சென்னை மாவட்ட எல்லையை ஒட்டியுள்ள செங்கல்பட்டு மாவட்டத்தை சார்ந்தது என்பதால் உரிய நடவடிக்கை எடுக்கும்பொருட்டு செங்கல்பட்டு மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்று ஆணையத்திடம் சமர்ப்பித்தார். எனவே இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது:-

> **இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்பு கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில் இதர அலுவலகப் பணிகளுக்கு குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து, மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்த மனுவில் கோரியுள்ள இனங்களுக்கான தகவல்கள் அடங்கிய கோப்புகள், பதிவேடுகள், ஆவணங்கள் உள்ளிட்டவற்றை மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு சட்டப்பிரிவு 2(j)-ன்படி ஆஜர்படுத்தி, அவர் ஆய்வு செய்வதை வீடியோ அல்லது புகைப்படம் எடுத்து, ஆய்வு செய்த பின்னர் அவர் தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டு கோரும்பட்சத்தில், மேல்முறையீட்டாளரிடமிருந்து உரிய கட்டணத்தை செலுத்தக் கோரி பெற்று, தகவல்களை சான்றொப்பமிட்டு வழங்கி, அவர் பெற்று**

**ஏற்பளிப்பு செய்த விபரத்தையும், ஆய்வு செய்த வீடியோ அல்லது புகைப்படத்தை இணைத்து அறிக்கையாக 30.06.2026 அன்றைய தேதிக்குள் ஆணையத்திற்கு பதிவு அஞ்சல் வாயிலாக சமர்ப்பிக்குமாறு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), செங்கல்பட்டு_அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 4755/B/20</u>**

**பெறுநர்**

1. பொது தகவல் அலுவலர்,
   ஆராய்ச்சி அலுவலர்,
   தமிழ்நாடு ஆவணகாப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி,
   எழும்பூர்,
   சென்னை-8.

2. பொது தகவல் அலுவலர் /
   மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொ),
   சென்னை மாவட்ட ஆட்சியரகம்,
   சென்னை - 600 001.

3. பொது தகவல் அலுவலர் /
   மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொ),
   செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரகம்,
   செங்கல்பட்டு - 603001.

4. மேல்முறையீட்டாளர்,
   திரு. N. சுந்தர்,
   எண்.2/34, யூரோப்பியன் லேன்,
   பட்ரோடு, பரங்கிமலை,
   சென்னை-600016.
   செல்.9094197123.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

Copy to: File. GP PC
220526